අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/40/08/08/2017

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2018.06.13

திரு/ திருமதி/ செல்வி ……………………………………………..

……………………………………………………………………
……………………………………………………………………

**<u>இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை III ம் வகுப்புக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட அதிகாரிகளுக்கான சேவை ஆரம்ப பயிற்சிநெறி ( மட்டுப்படுத்தப்பட்ட - 2018)</u>**

2018ம் ஆண்டில் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை III ம் வகுப்புக்கு மட்டுப்படுத்தப்பட்ட முறையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட அதிகாரிகளுக்கான கல்விச் சேவைகள் தாபன மேலதிக செயலாளரின் இல ED/4/59/1/5/1 (2015) LIM மற்றும் 2018.05.30ம் திகதியுடைய கடிதத்தின் அடிப்படையில் ஒரு மாதகால முழு நேர வதிவிட சேவை ஆரம்ப பயிற்சி நெறியொன்றினை நடாத்துவதற்கு கல்வி அமைச்சின் மனித வள அபிவிருத்தி கிளை திட்டமிட்டுள்ளது.

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் சேவை பிரமாணக் குறிப்பின் படி இப்பயிற்சிநெறியானது கட்டாயமாகும்.

இப் பயிற்சி 2018.06.20 தொடக்கம் 2018.07.20 வரையில் கீழ் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும் என்பதுடன் அதில் கலந்து கொள்வதற்காக நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்,

I. சிங்கள மொழி மூல அதிகாரிகளுக்கு மஹரகம தேசிய கல்வி நிறுவகம்

II. தமிழ் மொழி மூல அதிகாரிகளுக்காக மீபே கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம்.

இப்பயிற்சி நெறிக்காக இக் கடிதத்தின் பின் புறமாக குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களையும் எடுத்துக்கொண்டு 2018.06.20 மு.ப 2.00 மணிக்கு மீபே தேசிய கல்வி நிறுவகத்திற்கு சமூகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். அங்கு உங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்கொள்ளப்படும். இது ஒரு வதிவிட பயிற்சிநெறி என்பதனால் பயிற்சி நெறி இடம்பெறும் முழு நேரமும் தங்கி பயிற்சி பெறல் கட்டாயம் என்பதுடன், பயிற்சி நெறியின் ஒவ்வொரு கட்டங்கள் பற்றியும் பயிற்சியின் போது நீங்கள் அறியப்படுத்தப்படுவீர்.

தினசரி காலைப்பொழுதில் இலகுவான உடற்பயிற்சி நிகழ்வுகள் செய்ய எதிர்பார்க்கப்படுவதுடன் அதற்காகவும் தயாராக வருதல் வேண்டும்.

இது சம்பந்தமாக மேலதிக தகவல்கள் ஏதும் தேவைப்படின் 011 2784565 எனும் தொலைபேசி இலக்கத்திற்கூடாக மனித வள அபிவிருத்தி கிளையுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஏ.எஸ் ஹேவகே
மேலதிக செயலாளர் (பாடசாலை விவகாரம்)
கல்வி செயலாளருக்காக

எடுத்து வரவேண்டிய பொருட்கள்:-

1. நியமனக் கடிதத்தின் பிரதி
2. முத்திரை அளவிலான 3 புகைப்படங்கள் (3 cm x 2.5cm)
3. வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி ( கணக்கின் விபரங்கள் தெளிவாக தெரியக்கூடிய வகையில்)
4.உடற்பயிற்சி செயற்பாடுகள் செய்யப்படுமாகையால் உடற்பயிற்சி மேற்கொள்ள தகைமை கொண்டுள்ளதாக கூறும் அரச மருத்துவர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழ்
5. உங்கள் பாடசாலை அமைந்துள்ள வலயக் கல்வி காரியாலயத்தின் கணக்காளரின் ஒப்பத்துடன் கூடிய இறுதியாக பெற்றுக்கொண்ட சம்பள விபரம் ( கடன்கள் பற்றிய விபரங்கள்)

6.தனிப்பட்ட பயன்பாட்டுக்கு தேவையான பொருட்கள்
7.கட்டில் விரிப்பு மற்றும் தலையனை உறை
8.காலை உடற்பயிற்சிக்காக கறுப்பு அல்லது நீல நிற ட்ரக் கிட் (Track Kit) வெள்ளை டீ சர்ட் மற்றும் கன்வஸ் காலணி
9.பெண் அதிகாரிகளுக்காக - சேலை ( கையுடன் கூடிய சட்டையுடன்)
10.ஆண் அதிகாரிகளுக்காக - நீளமான கையுடன் கூடிய மேற்சட்டை (Shirt ) மற்றும் டை